**சுருக்கம்**

மருத்துவ உதவி – பொதுப்பணித்துறை, நீர்வள ஆதார அலுவலகத்தில் கண்காணிப்பாளராகப் பணிபுரிந்து ஓய்வு பெற்ற திரு.கே...ஜி.வரதராஜன் என்பவருக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்குப்பின் உட்கொள்ள வேண்டிய மருந்துகள் அரசு மருத்துவமனையில் இலவசமாக வழங்குதல் – ஆணை வெளியிடப்படுகிறது.

---

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (ட்டி2) துறை

அரசாணை(வா) எண்.967

நாள். 13.08.2014
ஜய, ஆடி 28,
திருவள்ளுவர் ஆண்டு 2045,

படிக்க:

1) அரசாணை (நிலை) எண்.17, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்.01.02.2002.
2) அரசாணை (வா) எண்.543, மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை, நாள்.14.05.2014.
3) திரு.கே.ஜி.வரதராஜன் என்பவரின் 06.08.2014 நாளிட்ட மனு.

*****

**ஆணை:**

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்துகொள்ளும் ஓய்வு பெற்ற அரசு ஊழியர்களுக்கு சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்குப்பின் உட்கொள்ள வேண்டிய சைக்ளோஸ்போரின் மருந்து இலவசமாக வழங்க ஆணையிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் திரு.கே.ஜி.வரதராஜன் என்பவருக்கு ஏற்கனவே சைக்ளோஸ்போரின் என்கிற மருந்தினை சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் இலவசமாக வழங்க அம்மருத்துவமனையின் முதல்வருக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

3. தற்போது, ஓய்வு பெற்ற அரசு ஊழியரான திரு.கே.ஜி.வரதராஜன் என்பவர் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சைக்குப்பின் உட்கொள்ள வேண்டிய சைக்ளோஸ்போரின் என்கிற மருந்தினை தனக்கு இலவசமாக மேலும் மூன்று மாதங்களுக்கு வழங்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

4. மேற்கண்ட சூழ்நிலையில் ஓய்வு பெற்ற அரசு ஊழியர் திரு.கே.ஜி.வரதராஜன் என்பவரின் கோரிக்கையை அரசு பரிசீலனை செய்து அதனை ஏற்று மேலும் மூன்று மாத காலத்திற்கு சைக்ளோஸ்போரின் என்கிற மருந்தினை நாளொன்றுக்கு 100 மி.கி. வீதம் சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை மூலமாக வழங்க அம்மருத்துவமனையின் முதல்வர் அவர்களுக்கு அனுமதியளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**மெ.கரிகாலன்**
அரசு துணைச் செயலாளர்

பெறுநர்:
திரு.கே.ஜி.வரதராஜன், பிளாட் எண்.51, ஆஜி ஈஸ்டர் அபார்ட்மெண்ட்,
கதவு எண்.'F' TTK நகர், 2வது மெயின் ரோடு, தாம்பரம் மேற்கு,சென்னை –600 045
முதல்வர், ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனை, சென்னை–600 003
மருத்துவக் கல்வி இயக்குநர், சென்னை – 600 010
மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மருத்துவப் பணிகள் கழகம்,
சென்னை–600 008நகல்:
மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் (டேட்டா செல்) துறை, சென்னை–9
இருப்பு கோப்பு / உதிரிக் கோப்பு.

**(ஆணைப்படி அனுப்பப்படுகிறது)**

சு.சந்திரசேகரன்
**பிரிவு அலுவலர்**